**செய்தி வெளியீடு எண்: 089** **நாள்: 04.02.2019**

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று **(4.2.2019)** தலைமைச் செயலகத்தில், நிதித் துறையின் கீழ் செயல்படும் கருவூல கணக்குத் துறை அலுவலகப் பயன்பாட்டிற்காக **2** கோடியே **32** லட்சத்து **18** ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான **38** ஜீப்புகளை வழங்கிடும் அடையாளமாக, **7** ஜீப்புகளுக்கான சாவிகளை ஓட்டுநர்களுக்கு வழங்கினார்கள்.

கருவூலக் கணக்குத் துறை அலுவலர்களின் செயல்திறனை ஊக்குவித்து மேம்படுத்துவதற்கான முயற்சியாக, மாநிலத்தில் உள்ள சார் கருவூலங்களை அந்தந்த மாவட்டக் கருவூல அலுவலர்கள் ஆய்வு செய்யவும், களப்பணிகளை மேற்கொள்ளவும், சம்பளக் கணக்கு அலுவலர்கள் தங்கள் பணிகளை செவ்வனே குறித்த காலத்திற்குள் செய்து முடிக்கவும், ஆய்வுக் கூட்டங்களில் கலந்து கொள்வதற்கு ஏதுவாகவும் **38** புதிய ஜீப்புகள் வழங்கப்படும் என்று **2018–19**ஆம் ஆண்டிற்கான நிதித்துறை மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, கருவூல கணக்குத் துறையில் செயல்படுத்தப்படும் IFHRMS, NHIS, PFMS, GEM போன்ற திட்டங்களை சிறப்பாகச் செயல்படுத்திட, **32** மாவட்டக் கருவூல அலுவலர்கள் மற்றும் **6** சம்பளக் கணக்கு அலுவலர்களின் அலுவலகப் பயன்பாட்டிற்காக **2** கோடியே **32** லட்சத்து **18** ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான **38** ஜீப்புகளை வழங்கிடும் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று **7** ஜீப்புகளுக்கான சாவிகளை ஓட்டுநர்களுக்கு வழங்கினார்கள்.

இந்த நிகழ்வின்போது, மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ. பன்னீர்செல்வம், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.க. சண்முகம், இ.ஆ.ப., கருவூல கணக்கு ஆணையர் / முதன்மைச் செயலாளர் திரு. தென்காசி சு. ஜவஹர், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**